
# ஜகதலப்ரதாபன்



**பக்ஷிராஜா பிலிம்ஸ்**

தயாரித்தது

*Directed by* **S. M. SRIRAMULU NAIDU**

★

**NARAYANAN & CO. RELEASE**

## நடிகர்கள்

P. U. சின்னப்பா ... ஜகதலப்ரதாபன்
N. S. கிருஷ்ணன் ... விசித்திரன்
P. B. ரங்காச்சாரி ... உலகாதிப மன்னன்
M. V. மணி ... விச்வரஞ்சிதபுர மன்னன்
T. S. பாலையா ... குரூரகர்மன்-மந்திரி
D. பாலஸுப்ரமணியம் ... தேவேந்திரன்
குளத்துமணி ... பிரஹஸ்பதி
B. பரமசிவநாடார் ... தேவலோக வஸ்தாது
M. S. முருகேசன் ... செம்படவன்
M. S. ஸரோஜினி ... இந்திரகுமாரி-சசிரேகா
T. A. மதுரம் ... மோஹனா-சசிரேகாவின் ஸகி
M. R. ஸந்தானலக்ஷ்மி ... ராணி விலாஸவதி
U. R. ஜீவரத்தினம் ... நாககுமாரி-ரத்னப்ரபா
S. வரலக்ஷ்மி ... அக்கினிகுமாரி-ப்ரகாசினி
T. A. ஜெயலக்ஷ்மி ... வருணகுமாரி-வாஹினி
P. சாரதாம்பாள் ... ஔவை
பேபி கமலா ... நடனம் : நாகலோகம்
யோகாம்பாள் / மங்களம் } ... நடனம் : தேவலோகம்

பாபநாசம் சிவன் ... பாட்டு
G. ராமநாதன் ... ஸங்கீதம்
V. B. ராமய்யா பிள்ளை ... நடனம்

டைரக்ஷன் : **M. ஸ்ரீராமுலு நாயுடு**

**கோவை ஸென்ட்ரல் ஸ்டுடியோவில்**
**பக்ஷிராஜா பில்ம்ஸ் தயாரித்தது.**

**நாராயணன் கம்பெனி வெளியீடு**

*[All Rights Reserved]*

# ஜகதலப்ரதாபன்

---

உதயகிரியில் சித்ரா பௌர்ணமிக் கொண்டாட்டம். அரசனும் அரசியும் பூஜை முடித்துக்கொண்டு பூங்காவனத்தில் சந்தோஷமாயிருக்கும் ஸமயம், அந் நிலா வெளிச்சத்தில் இன்பத்தைத் தரக்கூடியது எது என்று தங்கள் புத்திரர்களைக் கேட்கிறார்கள். முதல் இருவரும் காட்டில் வேட்டையாடுவதும், பகைவர்களை வென்று சிறைப்பிடித்து வருவதும் தங்கள் விருப்பம் என்றும் சொல்கிறார்கள். இவர்கள் சொன்னதற்கு மாறாக, ஜகதலப்ரதாபன் தான் பொன்னூஞ்சலிலமர்ந்திருக்க, இந்திரகுமாரி இன்னிசைபாட, நாககுமாரி, வர்ணகுமாரி, அக்னிகுமாரிகள் சைத்யோபசாரம் செய்து தன்னை சந்தோஷப்படுத்துவதே தன் விருப்பம் என்று கூற மன்னன் கோபங்கொண்டு; அவன் சொன்னது தவறு என்று ஒப்புக்கொள்ளாவிடில், தன் மகனென்றும் பாராது சிரச்சேதம் செய்துவிடுவதாய்க் கோபித்துச் செல்கிறான். தன் அன்னையின் விருப்பப்படி நாட்டைவிட்டு வெளியேறிய ப்ரதாபன், வழியில் விசித்திரனின் நட்பைப் பெறுகிறான். காளியே ஔவை ரூபத்தில், ஒரு குடிசையை எற்படுத்தி, ப்ரதாபனையும் விசித்திரனையும் மாடு மேய்த்துக்கொண்டு தன்னுடனிருக்கும்படி செய்கிறாள்.

இவர்கள் மாடுமேய்க்கும் காட்டிலுள்ள ஒரு குளத்தில் நான்கு தேவ கன்னிகைகள் நீராடி விளையாடுகிறார்கள். ஒருவரையொருவர் பிரியாதிருக்க நால்வரும் ஒரே புருஷனை மணப்பதென்று தீர்மானிக்கிறார்கள். வழக்கம்போல் மாடு மேய்க்கச் சென்றவர்கள் தேவ கன்னிகைகள் நீராடும் காக்ஷியை யதேச்சையாகப் பார்க்க, ஆசை மிகுதியால் ப்ரதாபன் கரைமீதிருந்த இந்திர குமாரியின் சேலையை எடுத்து ஒடுகிறான். பின் பற்றிச் சென்ற இந்திரகுமாரி அவனை சிலை ரூபமாக்குகிறாள். நண்பனுக்கேற்பட்ட விதியை அறிந்த விசித்திரன் ஔவையிடம் முறையிட, அவள் சிலைக்கு உயிர் கொடுத்து, அவன் சிலையானதின் காரணம் இந்திர குமாரியேயென. அவளை எப்படியும் அடைந்தே தீரவேண்டுமென்று ப்ரதாபன் ஔவையிடம் மன்றாடுகிறான்.

மறுதினம் ஔவை தெரிவித்த உபாயத்தின்படி, இந்திரகுமாரியின் சேலையை, ப்ரதாபன் திரும்பிப் பாராமல் எடுத்து வந்து, ஔவையிடம் கொடுக்க, அவள் அதை அவன் காலில் மறைத்துவைத்து அவனையும் ஒரு சிறு குழந்தையாக மாற்றுகிறாள். பின் தொடர்ந்துவந்த இந்திரகுமாரி ஔவையின் குடி

[விலை 1 அணா]

சேலையை யடைந்து, தன் சேலையில்லாமல் தேவலோகம் போக முடியாமலிருப்பதை உணர்ந்து, ஔவை சொல்லுக்கிணங்கி அவ்விடமே தங்கி, குழந்தையுடன் கொஞ்சி காலத்தை கழிக்கிறாள். ஔவையின் அருளால் ப்ரதாபன் இந்திரகுமாரியை மணந்து அவள் ஆசீர்வாதம் பெற்று மனைவியுடனும் நண்பனுடனும் அவ்விடத்தைவிட்டு அகல்கிறான்.

விச்வரஞ்சிதபுரத்தரசனும், மந்திரியும் வேட்டையாடவந்த சமயம் இவர்களைச் சந்தித்ததின் பலனாக ப்ரதாபன் ராஜாங்க சேர்வைக்காரனாக நியமிக்கப்படுகிறான். இந்திரகுமாரியின் அழகு அரசன் கருத்தையழிக்கிறது. அவளை எப்படியும் அடைய வேண்டுமென்று தன் மந்திரியின் உதவியை நாடுகிறான். மந்திரி, மோஹனவைக்கொண்டு இந்திரகுமாரியின் மனதைக் கலக்க முயற்சிக்கிறான். இது முடியாமற்போகவே பொய்க் காரணங்களைக்கொண்டு ப்ரதாபனை நாகலோகத்திற்கும், வருணலோகத்திற்கும், மேலுலகத்திற்கும் அனுப்ப சோதனைகள் பலவற்றிலும் அவன் வெற்றி பெருவதுடன் நாககுமாரி, வருணகுமாரி, அக்கினிகுமாரிகளை மணக்கிறான். மதியில்லா மன்னனும், தன் மந்திரியும் மற்றும் சிலரும் தீக்கு இரையாகின்றனர்.

தேவ கன்னிகைகள் தங்கள் தெய்வீக சக்தியால் மனோரஞ்சிதபுரம் என்னும் அழகிய நகரை நிர்மாணிக்கிறார்கள். ஏழ்மை நிலையையடைந்த தன் பெற்றோர்களையும், சகோதரர்களையும், மீண்டும் அடையும் பாக்கியம் பெறுகிறான். அவர்களும் சந்தோஷமடைகின்றனர். சுகமும் துக்கமும் ஒன்றையொன்று தொடர்ந்து வருவது உலக இயல்பு. வேட்டைக்குச் செல்லும் ப்ரதாபன், தன் காவில் பத்திரப்படுத்தியிருந்த சேலையை ஒருவருக்கும் தெரியாமல் தன் தாயாரிடம் கொடுத்துச் செல்வதை இந்திரகுமாரி மறைந்து பார்க்கிறாள். தங்களிடம் நம்பிக்கையில்லாமல்தான் தன் தாயாரிடம் அச்சேலையைக் கொடுத்தார் என்று தவறாக ப்ரதாபனின் மனைவிகள் எண்ணுகிறார்கள். தங்கள் மாமியிடமிருந்து நயவஞ்சகமாய் அச் சேலையைப்பெற்று, அதன் உதவியால் தேவலோகம் செல்கின்றனர்.

ஜகதலப்ரதாபனும் அவன் பெற்றோர்களும் மற்றவர்களும் பழையபடி ஏழ்மை ஸ்திதியை அடைகின்றனர். இதன் காரணமறிந்த ப்ரதாபன் ஔவையின் அருளால் அவர்களை யடையும் வழியை அறிந்து, தேவலோகம் சென்று இந்திரனிட்ட பல சோதனைகளிலும் ஜெயமடைந்து, தன் மனைவிகளுடன் சந்தோஷமாய் பூலோகம் திரும்புகிறான்.

சுபம்

# ஜகதலப்ரதாபன்

## 12 மந்திரி கதை

---

1. விலாஸவதி—உலகாதிபன் தன்யாசி—ஆதி

கோபாலா ஸஜ்ஜனபாலா
கோகுல பரிபாலா தயாளா (கோ)
கோபியர் உளம் ஆடையும் கவர் கள்வா
த்ரௌபதி மானம் காத்தமுதல்வா
தேவகி வசுதேவர் தவப்புதல்வா
ஸ்ரீருக்மிணி கேள்வா எமையாள்வாய் (கோ)
உன்பாதம் ஸததம் நம்பினேம்
அன்பாலுன் திருநாமம் புலம்பினேம்
துன்பாழியில் சூழலினும் நீ துணை
இன்பாமுதம் ஊட்டினும் நின்னருள் (கோ)

2. ப்ரதாபன் அடாணா—ஆதி

அம்பா அகிலலோக நாயகி
அனாதியே திருவடியிணை துணை ஜெக (தம்பா)
நம்பும் எழை உள்ளம் நீ அறியாயோ
நன்மையும் தீமையும் நீயே
நடனமாடும் காளியே என் தாயே
நாயேன் செய் பிழையேது ஓ ஜெக (தம்பா)
பொன் பொருளாடையோடின்புறும் ராஜ
வைபோகம் விரும்பி வருந்தேன்
அன்னையைப் பிரிவதை எண்ணி வருந்தினேன்
அன்னை உன் ஆணை இதோ தயாபரி (அம்பா)

3 இந்திரகுமாரி—சசிரேகா தர்பார்—ஆதி

வானவெளி தவழும் நீல முகிலெனும்
விமானம் ஊர்வதென துளம் மகிழ்வேலை
மணம்கலந்த இளம்தென்றல் வீச, உயர்
மலைகளைத் தடவும் மனோகரச்சோலை

நாககுமாரி—ரத்னப்ரபா ஸிந்துபைரவி—ஆதி

காற்றையுண்டு உயிர் வாழ்வேன்
சோற்றுக்கவலை எனக்கில்லை
கணத்திலே மூவுலகம்பவனி
புற்றின்வழி யெங்கும் சுற்றி வருவேன்

வருணகுமாரி—வாஹினி செஞ்சுருட்டி—ஜம்பை

பரமபத நாதன் துயில் பால்கடலுடன்
எழுகடலும் எனது விளையாடும் இடமே

அக்னிகுமாரி—பிரகாசினி மத்யமாவதி—ஜம்பை

எந்த உயிரும் எனது தந்தையிலையேல்
நிஜ இன்பமுறுமோ வயிர் நிரம்பலுறுமோ

எல்லோரும் காபி—திச்ரம்

பற்பல வண்ணமலர்கள் மரங்களில்
பறவைகள் கீதம் (நம்ம)
கற்பகச் சோலை இங்கெப்படி வந்தது
கண்களின் விநோதம்
சேர்ந்து விளையாடுவோம் குளிர்தடமிதிலே (சே)
செங்கமலமும் பைங்குவளையும்
செவ்விதழ் விரித்தே நகைக்கும் தலை
யசைத்தே இவைகளுடன் (சே)

4. விசித்திரன்

பொளப்புகெட்ட மாமா, உன்பெண்ணைக்கட்டிக்
கொள்ளும்
இளிச்சவாயன் நான்தான்—இல்லவே யில்லை:
மூக்கி அரமூக்கி மொச்சகொட்ட பல்லி
போக்கிரிக்கிதாலி போடவேமாட்டேன்
கோவப்பழம்போலே காவிக்கல்லுபோலே
குண்டுமணிபோலே நான் கொண்டுவரப்போறேன்.
நல்ல பெண்ணை தேடி நாலு பேர் அறிய
பல்லாக்குதூக்கி பகல்வாணம்விட்டு
உள்ளபடி கல்யாணம் ஊருமெச்ச செய்திடுவேன்.
உளிகொண்டு ஒரு சிற்பி அளகுண்டு பண்ணிய
கருங்கல்லுத்தெய்வங்களே மனமிரங்கி அருள்தன்னை
செய்யுங்களே.

5 விசித்திரன் & ப்ரதாபன் மாண்டு—ஆதி

வி.—சடுதியில் மேய்த்திடுவோம்
படுகையில் ஓட்டிடுவோம்—பர
மானந்தமாகப் பசுமாடெல்லாம்
ஜ.—திடலில் வயலில் மேய்ச்சல் தரையில்
தடமூலாவிய நீர்நதிக்கரையில் (சடு)
வானமளாவிய பல்நூறு மரங்கள்
மகிழ்ந்து பாடும் பறவைகள்
கானகம் மலைவீழும் வெள்ளருவி
கண்கவரும் அழகே
வி.—காணுதலை இங்கு கண்டவன்போலவே (ப)
கத்துகிறாய் பொழுதுசாயுதே—சும்மா
சுற்றுகிறாய் வயிறு காயிதே
ஜ.—தேய்த்து நீராட்டுவோம் வாராய் விசித்திரா
தனிமை வாழ்விதுவே மனங்குளிரும்
இனிய வாழ்விதுவோ
இருவரும் சடுதியில் மேய்த்திடுவோம்

6. நான்கு தேவகன்னியர்கள் மாண்டு—ஆதி

ஸல்லாபமுடன் வெகு உல்லாஸமாய்
இங்கு எல்லோரும் நீராடுவோம்
ஆனந்தமே, தனி ஏகாந்தமே உயர்
இன்பந்தரும் மனச்சாந்தமே
கண்கள் நிகர்தள நீலோத்பலம்
பண்பாடும் வண்டுகள் சூழ்கமலம்
பாராய் சிதறிவரும் நீர்த்திவலை
கரையோரங்களில் கமுகு தென்னங்குலை
(ஆனந்தமே......சல்லாபம்)

7. விலாஸவதி கமாஸ்—ஆதி

தாயே என்ன செய்வேன்
நீயே சோதனை செய்தால் எந்தன் (தாயே)
சேயை ப்ரதாபனை செல்வப் புதல்வனை
சிறுபொழுதும் பிரிந்தறியேன் அம்பா (தாயே)
பார்தனிலே எனக்கார் துணை தேவி
பார்வதி, நினைதொறும் பதைக்குதென் ஆவி

பாலருந்தும் கன்றைப் பிரித்தேனோ பாவி
பழவினையோ தயவில்லையோ எந்தன் [தாயே]

8. கேதாரகௌளம்—சாபு

ஸ்வாமிக்கு ஸரி எவரே
சந்த்ரவதன ஸ்ரீ கிருஷ்ண [ஸ்வாமி]
ச்யாம ஸுந்தர ஜகன்மோகன லாவண்யன்
கோமளசரண கோபிகாரமணன்
குளிர்நகை தளர்நடை பாலக்ருஷ்ண [ஸ்வ]
பாற்கடலதனில் பள்ளிக் கொண்டவன்
பாரில் நந்தகோபாலனாய் பிறந்து
பால் தயிர் வெண்ணை திருடியுண்டவன்
பதம் பணியு மன்பர் பவநோயாற
வந்தருளும் என் ஸரஸகோபால [ஸ்வாமி]

9. இந்திரகுமாரி மோஹனம்—ஆதி

என்னை விட்டோடாதேடா கண்ணா
உன்னைவிட்டால் எந்தன் ஊனுயிர் வாடுமே [எ]
கண்ணே வாடா கட்டிக் கரும்பே வாடா
கைந் நிறைய வெண்ணை தருவேன்
திரும்பிப்பார்
என்னால் உன்னுடன் ஓட முடியுமோ
உன் திருமலரடி நோகாதோ
உன்னைப் பிடிப்பேன் அங்கு நில் நில் வாவா
இன்பக் கனி மழலைச் சொல் சொல் [என்னை]

10. இந்திரகுமாரி ஸிந்து பைரவி—ஆதி

காதலெல்லாம்கொள்ளை கொண்டாய் கண்ணா கண்ணா
கடைக்கண் பார்த்தருளாயோ ,, ,,
வேதமெனக் குன்னிசையாம் ,, ,,
வேணுகானம் செய்வாய் என்னுள் ,, ,,
ஆக்கை உன் ப்ருந்தாவனம் [என்] ,, ,,
ஆடும் உயிர் நீ அதிலே ,, ,,
வாழ்க்கை உனது ராதை ,, ,,
வாரி யணைத்துக் கொள்வாய் ,, ,,
பொங்குக்கடல்என் ஆர்வம் [அதில்] ,, ,,

பூர்ணமதி யுன் முகம் கண்ணு கண்ணு
பங்கயம் என் அன்பு மலர் ,, ,,
ப்ரீதியுன் புன்னகையாம் ,, ,,

பரசு—ஆதி

**11** இந்தி : மூடநெஞ்சே வீண்மோகம் ஏன் கொண்டாய்
மூடவன் கொம்புத்தேன் விரும்புவதுபோல [மூ]

முகாரி—ஆதி

ப்ரதா: பாசாங்குகளிங்கு செல்லாதம்மா உந்தன்
மோசம் தெரிந்துகொண்டேன் மோகினி [பா]

ஸ்ரீரஞ்சனி—ஆதி

இந்தி : ஒருமோச மறியேன் ஸ்வாமி
உம்மை என்முழுமனதுடன் காதலித்ததல்லது [மோ]

சாரங்கா—ஆதி

ப்ரதா: முன்னொன்று பின்னொன்றும் மொழிவதும்
மிஞ்சினால் அழுவதும் இதெல்லாம்
பெண்கள் சாகஸம்தானே

குரிஞ்சி—திச்ர ஏகம்

இந்தி: ஸாகஸமா இது ஸாகஸமா
ஸாகஸமா—எது ஸாகஸம் ஸ்வாமி

**12** இந்திரகுமாரி சக்ரவாகம்—ஆதி

பரதேவதையே கருணை செய்வாயே
பரம பாவனி துளஸீ தாயே [பர]
வரகுண ஜாலே மங்களமூலே
பாலே எமைப் பரிபாலி ஸுசீலா [பர]
கமழ்மணமும் உனது மெல்லிய மேனியும்
கண்டு முகுந்தனுனை முடிமேல் கொண்டான்
அமலையுன்னாலே (ஸத்ய) பாமை முன்னாலே
அந்நாள் ருக்மிணி பந்தயம் வென்றாள் [பர]

**13.** ப்ரதாபன்—நாககுமாரி குந்தளவராளி—ஆதி

நாக:—கேள்விமுறை இல்லாமல் உள்ளே புகுந்தவர் யாரையா
ஜ. —கேளுமய்யா, உங்கள் மாமன் மகன் நான்தானையா

ஆட்டுக்காலெடுத் தம்பலத்தில் நின்றீர்
அதனைச் சொன்னேனோ—ஒற்றை
மாட்டுக்காரரென் றுரோடாகிலும்
வாய்மதம் சொன்னேனோ—தலை
ஓட்டிலே யிரந்துண்டீரென் றந்த
உண்மையைச் சொன்னேனோ—பல்லைக்
காட்டி முப்புரத்தார் முன்னே நின்ற
கதையும் எச்சிலுண்டதையும்
சொன்னேனோ [ஏது]
ஜாதியும் தாயுந் தகப்பனுமில்லாத
தனியனென்றேனோ—பெண்ணில்
பாதியுடம்பாகிக் கள்ளும் சுமந்திட்ட
பறையரென்றேனோ—ஜாதி
பேதமாய்ப் பிள்ளைக்குக் குறவர் வீட்டில்
பெண் கொண்டீரென்றேனோ—மறை
ஓதிவணங்கும் நடேசரே உம்மை நான்
ஒப்பாருமில்லாத தப்பிலியென்றேனோ
[ஏது]
அழுந்தவே பிரம்படி பட்ட கூலியாள
ரென்றேனோ—தசை
கழிந்தவெள் ளெலும்பணிந்த
பயித்தியக் காரரென்றேனோ—கட்டப்
பழந்துணியின்றித் தோலுடுத்த அந்தப்
பழிப்பைச் சொன்னேனோ—சிறு
குழந்தையைக் கொல்லக் கிழவனாய் வந்த
குட்டெல்லாம் வெளியில் விட்டுநான்
சொன்னேனோ [ஏது]

17. வீசித்திரன்—மோஹனா

வி. —உன்னைக்கண்டபிறகு மனம் சொன்னபடி
கேட்குதில்லே

மோ. —என்னைக் கண்டதும் உன்மனது என்ன பண்
[ணுது

வி. —கண்ணுக்கே தூக்கம் இல்லே காரிகையுன்
ஏக்கம்

மோ. —ஏக்கத்திற்கும் உந்தன் தூக்கத்திற்கும் இந்த
ஏந்திழை நானென்ன செய்யட்டும்

வி. —நோக்கம் தெரிந்து நடப்பதைவிட்டு நீ கேக்குராய்
என்னென்று சொல்லட்டும் அதை [கே]

மோ. —சொல்லாமலே தெரிய நாங்க ஜோசியமேதும் படிக்கலே

வி. —சொல்லாமல் சொல்லுவாய் கொஞ்சங்கூட எனக்குப் பிடிக்கலே

மோ. பிடிக்கலயோ

வி. —அதுக்கல்லம்ம

மோ. —பின்னே, எதுக்கு, இப்போ என்ன இங்கே, ஏன்

வி. —அதுதான்—ஆ—ஊம்—ஏன்

மோ. —ஆஹா, முடியாது வெளியே போ

வி. —போகேன்

மோ. —போதும், பெண்ணும் ஆணுடன் நின்னு பேசினுல் என்ன எண்ணுவார்

வி. —நமக்கொரு நாளைக்குத்தான் நடக்குமாம்பார் பிப்பிப்பிவைச்சு

மோ. —அதென்ன

வி. —கல்யாணம்

18. ப்ரதாபன் பியாகடை—ஆதி

காப்பதுன்பாரமையா—என்னை [கா]
கழலிணையேகெதி நீ சேயனைக் [கா]
கூப்பித்தொழும் ஸுரமுனிவருக்கும்—கை
கொடுக்கும் தயாளனே தீயெனும் தூயனே
சேயனைக் [கா]

நஞ்சன வஞ்சகர் சதியால் உயர் திரு
நாவரசனும் சோதனை கொண்டார்
கொஞ்சும் மழலைப்ரஹலாதனும் தந்தை
கொடுமையை வென்றனன் கோரிடும் தேவர்கள்
[தேவனே

பார்தனில் இளம்பருவமுதலுன்
சீர்பதம் கனவிலும் மறந்தேனே
யார்துணை உனது தண்ணருளல்லது
சோதனையும் தாளேன் மனமிரங்கிய [கா]

**19.** இந்திரகுமாரி—நாககுமாரி நடபைரவி—ஆதி

ஜெயமங்களம் நித்ய சுப மங்களம்
பகை யழிந்து பயம் ஒழிந்தது—எங்கும் [ஜெ]
விண்ணுலகின்பம் மண்ணிலும் கண்டோம்
வீர ஸ்வதந்திர வாழ்வு மடைந்தோம் [ஜெ]
மித்திரனுன விசித்திரன் மனமோகனுவின்
மணவாளனும் ஆனுர் [ஜெ]

**20.** உலகாதிபன் புன்னகவராளி—ஆதி

எங்கே செல்லுவேன் இறைவா என்முறை உன் [செவி
ஏருதோ எங்கும் நிறைவாய்
மங்காத மனேதிடமும் அபரஞ்சித்
தங்கமணி மகுடமும் மறைந்தின்று
தங்கும் இடமும் உயிர்தாங்கும் உடையுமின்றி
தாரமொருபுறம் குமாரர் ஒருபுறமாய்த்
தவிக்கும் இதை என் சொல்லுவேன், ஆபத்
திற்கு உதவிக்கும் எவருமில்லேயே,

**21.** இந்திரகுமாரி காம்போதி—ஆதி

பாக்யசாலிகளுண்டோ நம்மைப்போலொரு
பகைவர் அஞ்சும்
ப்ரதாபம் மிகுந்த ப்ரதாபனே மணந்த [பா]
ச்லாக்ய குணமும் த்ரைலோக்யம் புகழ் புஜ
பராக்ரம தீர ஒய்யாரன்தனே மணந்த [பா]
பால்வடியும் மதிமுகன் அரும்பும் யௌவனப்
பருவம் மிகுகட்டழகன் நம் மனம்போல
நால்வரும் மணந்தோம் சொல்லரும்
பேரானந்த மடைந்தோம் எந்த உலகிலும் [பா]

**22.** ப்ரதாபன் தேஸ்—ஆதி

உன் கருணையின்றி என் செயலுண்டோ
ஓ ஜகஜ்ஜனனி அன்னேயே [உ]
என்கதி நீயே—என் நிதி நீயே
எங்கும் நிறைந்தனேயே—என் அன்னேயே [உ]

ஸிம்மேந்திர மத்திமம்—ஆதி

இளங்கன்று பயமறியாதென்பார்
இன்பக் கனவெல்லாம் நினைவிலும் தந்தாய்

உளங்கலங்க விடுவதுனதருளோ
உன் சேயேன் —நான் என் செய்வேன் [உ]

23. ப்ரதாபன் கல்யாணி—ஆதி

தாயைப் பணிவேன்—அன்புடனே [தாயை]
ஸந்ததமும் எந்தன் தந்தையோடு [தாயை]
ஆயும் மறைகளெல்லாம் புகழ்கனிந்த
அன்புமிக்க அன்னைபோல தெனது [தாயை]
நடுக்கமுறும் இடுக்கண் பல எய்தினும்
கிடைக்குமவள் கடைக்கண் பார்வை
அடைக்கலமென் ரொருமுறை சொன்னால்
போதும்
அகிலஉலகும் படைத்தளிக்கும் பரதெய்வத்[தா]

24. ப்ரதாபன் ஹிந்துஸ்தான் அசாவேரி—ஆதி

தருணமிதம்பா—நின்னருளல்லால்
தாரணியில் துணையாரே
திருவுள்ளமேதோ தயை புரியாயேல்
தாயே நாயேன் ஏதுசெய்வேன் ஜெய
ஜெகதம்பிகே
தேவி இன்னும் சோதனையோ
சேவடியே தினம் மறந்தறியேன்
தேவியாரோடும் தந்தையின் நாடும்
பிரிந்தே திரிந்தேன் என் துயர் ஆழ்ந்தேன்
தர்மமோ என் தாயே

25. ப்ரதாபன் மாண்டு—ஆதி

இன்பம் அடைந்தோமே—முடிவில்லா [இன்ப]
துன்பமகன் றதே ஒன்று கலந்தே [இன்ப]
அன்புகனிந்திட ஆசி மொழிந்தார்
அன்னை தந்தையர் திரு ஸந்நிதிசேர்ந்தே[இன்ப]
பொழுது புலர்ந்தால் மகிழ் உயிர் போலே
புடம் மருவும் உயர் தங்கமும் போலே
நிழலினின்பம் வெயில் சேர்ந்தவர் போலே
நிர்மலமாகாளியின் தண்ணருளாலே [இன்ப]

மங்களம்

Sri Saraswathi Vilasam Press, Alwarpet, Madras-18